
THE SUDAR OLI

# சுடர் ஒளி

Registered as Newspaper

10.04.2020 வெள்ளிக்கிழமை தொடர்புக்கு 07

## பாதிப்பு 1,620,000 உயிரிழப்பு 97,000



வுகான், ஏப். 10
கொரோனாவால் உலக அளவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி 16 லட்சத்து 20 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 97 ஆயிரமாக அதிகரித்தது.
கொரோனா வைரஸ் உலகெங்கும் பல உயிரிழப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. உச்சக்கட்டமாக நேற்று மட்டும் 7,234 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். 85 ஆயிரத்து 589 பேர்

2



# வயோதிபரின் தலையில் கோடரியால் கொத்தி நகைகள் கொள்ளை

## மீசாலையில் ஊரடங்கு நேரத்தில் பயங்கரம்

### வயோதிபத் தம்பதியர் மருத்துவமனையில்

கொடிகாமம், ஏப். 10
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீசாலைப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நுழைந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த வயோதிபத் தம்பதியினரைத்தாக்கி நகைகளைக்கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

2



## பதுங்கியிருந்த 49 பேர் கைது

### கொரோனா சந்தேகத்தில் தேடப்பட்டவர்களாம்

கொழும்பு, ஏப். 10
இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பதுங்கியிருந்த, கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 49 பேர் கடந்த 24 மணித்தியாலங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
49 பேரும் கடந்த மார்ச் மாதத்தில் இலங்கைக்கு வந்து மறைந்திருந்தனர் என்று தகவல் கிடைத்தது.
இதற்கமைய நடத்திய விஷேட தேடுதல் நடவடிக்கை மூலமாக இவர்கள்

2

## அரச பணியாளர் சவால் வேலணைப் பிரதேச சபை முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஏப். 10
வேலணைப் பிரதேச சபையின் பணியாளர்கள் தமது மாதாந்தச் சம்பளக் கொடுப்பனவிலிருந்து ஒரு தொகை நிதியை 'அரச பணியாளர் சவால்' என்ற பெயரில் கொரோனா இடர் நிவாரணச் செயற்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர். கொரோனா

2

## விடுவிக்கப்பட்டோரில் தமிழர் எவருமில்லை

### சாடுகின்றது தமிழீழ அரசு

கொழும்பு, ஏப். 10
கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக இலங்கைச் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனரெனினும், தமிழர்கள் எவரும் விடுவிக்கப்படவில்லை. இது இலங்கை அரசு 'ஓர் இனநாயக அரசு' என்பதை மீளவும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறு குறிப்பிட்டுள்ளது, நாடு கடந்த தமிழீழ அரசின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு. இது பற்றி மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
பெருந்தொற்றைத் தடுக்கும் நோக்கில் கடந்த மார்ச் மாதம் 17 தொடக்கம் ஏப்ரல் 4 வரை 2ஆயிரத்து 961 பேர் பல கட்டங்களாக விடுவிக்கப்பட்டுள்ளனர். இலங்கை அரசு என்பது ஓர் கட்டமைக்கப்பட்ட

2

## வட்டாரப் பிரதிநிதி மாத்திரம் மக்கள் பிரதிநிதி அல்ல

### பஸிலுக்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அவசர கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 10
நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளவுள்ள பயனாளிகள் பட்டியலில் ஒப்பமிடுவதற்கான குழுவில் உள்ளூராட்சி மன்றங்களின் வட்டாரப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. வட்டார பிரதிநிதி மாத்திரம் மக்கள் பிரதிநிதி அல்ல என்பதும், இறுதியாக இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கலப்பு முறையில் நடைபெற்றதைக் கருத்தில் கொண்டு பிரதேச செயலரின் அனுமதியுடன் பெண் பிரதிநிதித்துவம் உள்ளிட்ட உரிய பிரதிநிதிகளை உள்வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம், ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

2

## யாழ். வர்த்தகர்களின் பிரச்சினைக்குத் தீர்வு

யாழ்ப்பாணம், ஏப். 10
ஊரடங்கு நேரத்தில் மாவட்டத்திலிருந்து வெளியில் செல்வதற்கு பாஸ் பெற்றுக் கொள்வதற்கு அரசு அறிவித்துள்ள புதிய நடைமுறையால் பெரிதும் பாதிக்கப்படுவதாக யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர்கள் தெரிவித்தி

2

## குடும்பத் தலைவர் மீது படையினர் கடும் தாக்கு

### புதுக்குடியிருப்பில் சம்பவம்

முல்லைத்தீவு, ஏப். 10
குடும்பத் தலைவரைப் படையினர் கடுமையாகத் தாக்கி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. விறகு வெட்டுவதற்காகவே காட்டுக்குள் சென்றிருந்தேன் என்றும் அங்கு படையினர் நிற்பதனைக் கண்டதால் அங்கிருந்து திரும்பிச் செல்ல முற்பட்டபோதே தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் தாக்குதலுக்குள்ளான நபர் கூறியுள்ளார்.

2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# வயோதிபரின் தலையில் கோடரியால் கொத்தி...

படுகாயமடைந்த தம்பதியினர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். ஊடரங்குச் சட்டம் பாதுகாப்புத் தரப்பினரால் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நிலையில் இடம்பெற்ற இந்தக் கொள்ளைச் சம்பவம் மக்களிடையே பயப் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 2.30 மணியளவில் மீசாலை சோலையம்மன் கோவிலை அண்மித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளது. வீட்டின் முன்பகுதி கூரையைப் பிரித்து வீட்டுக்குள் நுழைவதற்கு கொள்ளையர்கள் முயற்சித்துள்ளனர். அந்த முயற்சி தோல்வியடைந்த நிலையில் சமையலறையின் புகைக் கூண்டை உடைத்து அதன் ஊடாக உள்நுழைய முயற்சித்துள்ளனர். அதுவும் கைகூடாத நிலையில் வீட்டுக்குப் பின்னால் இருந்த ஏணியின் மூலம் ஏறி கூரையைப் பிரித்து உள்நுழைந்துள்ளனர். சத்தம் கேட்டு எழுந்த வயோதிபத் தம்பதியினரை கோடரியால் கொள்ளையர்கள் தாக்கியுள்ளனர். அங்கிருந்த நகைகளைக் கொள்ளையடித்துக்கு கொண்டு தப்பித்துச் சென்றுள்ளனர். காயமடைந்த தம்பதியினர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் இரண்டு கொள்ளையர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாகவும், அவர்களைத் தேடி வருவதாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ,5,26,159)

## வட்டாரப் பிரதிநிதி...

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கிராமிய மட்டத்தில் நிவாரணங்களை வழங்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட குழுவுக்குள் உள்ளடங்கும் உறுப்பினர்கள் அறுவருக்கு இடையில் முதலாவதாக அறிவிக்கப்பட்டுள்ளவர் பிரதேசத்தின் அரசியல் வேலைத் திட்டங்களை நடத்தும் மக்கள் பிரதிநிதி ஒருவரது பிரதிநிதித்துவமாகும்.
இந்தப் பிரதிநிதித்துவத்தை அடையாளம் காண்கின்ற போது மற்றும் ஒன்றாக இணைந்து சேவையாற்ற விளைகின்றபோது பிரதேச செயலர் உள்பட கிராம அலுவலர் ஆகியோரும் சங்கடங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதோடு அது தொடர்பிலான முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.
நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொகுதிவாரி மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய கலப்பு முறையில் இடம்பெற்றது. தொகுதிவாரி பிரதிநிதிகள் மிகக் குறைந்தளவு வாக்குகளுடன் தெரிவு செய்யப்பட்டனர். விகிதாசார முறையில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு உறுதியான வட்டாரம் இல்லை. அப்படியான பிரதிநிதியை இந்த வேலைத் திட்டத்தில் எப்படி உள்வாங்குவது என்பது சிக்கலுக்குரியது.
இலங்கையிலுள்ள 1919 பெண் பிரதிநிதிகளில் 537 பெண் பிரதிநிதிகள் மாத்திரமே வட்டார உறுப்பினர்களாவர். எஞ்சியுள்ள 1382 பெண் பிரதிநிதிகளும் செயலிழந்த பிரதிநிதிகளாக மாறக் கூடிய ஆபத்துக் காணப்படுகின்றது.
கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சிலர் நாணயச் சுழற்சி மூலமே தெரிவு செய்யப்பட்டார்கள். தொழில்நுட்ப ரீதியில் தோல்வியடைந்த அவர்களை இந்த வேலைத் திட்டத்திலிருந்து ஒதுக்குவது பொருத்தமாக அமையாது.
வட்டாரம் ஒன்றில் போட்டியிட்டு குறைந்த வாக்கு வித்தியாசத்தில் உறுப்பினர் பதவியை இழந்த வேட்பாளருக்கும் மேற்படி குழுவில் உறுப்பினராவதற்கான அழைப்பை விடுத்திருக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக குறிப்பிட்ட வட்டாரத்தின் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிராத ஆயினும் உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினராகப் பதவி வகிக்கின்ற பெண் உறுப்பினர்கள் உட்பட ஏனைய தரப்பினரும் அவர்களது விருப்பத்தின்படி பிரதேச செயலரின் அனுமதியுடன் குழுவில் இணைத்துக் கொள்வது சிறப்பான விடயமாகும், என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஒ,5)

## பதுங்கியிருந்த..

கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது. இவர்களில் அதிகளவானோராக 10 பேர் மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அம்பாறையில் 4 பேரும், நுகேகொடயில் 4 பேரும், பது ளையில் 5 பேரும், சிலாபத்தில் 5 பேரும், களுத்துறையில் 3 பேரும், களனியில் 2 பேரும், குருணாகலில் 2 பேரும், அநுராதபுரத்தில் ஒருவரும். மாத்தறையில் இருவரும், குளியாப்பிட்டியில் ஒருவரும் கண்டுபிடிக்கப்பட்டனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார். இந்த நபர்களில் 15 பேர் கட்டார் நாட்டிலும் மேலும் 15 பேர் இந்தோனேஷியாவிலும், 4 பேர் ஜோர்தான் நாட்டிலும், 8 பேர் சோமாலியா நாட்டிலும் 4 பேர் இந்தியாவில் இருந்தும் வந்துள்ளனர். அவர்களில் அம்பாறை, அக்கரைப்பற்று பிரதேசத்தில் ஒருவரும், களுத்துறை பேருவளை பிரதேசத்தில் ஒருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவு இதுவரையில் உறுதி செய்துள்ளது. (த-22)

## யாழ். வர்த்தகர்களின்...

ருந்த நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் நடத்திய கூட்டத்தில் அதற்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுக் காலை கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது வர்த்தகர்களின் பிரச்சினை தொடர்பிலும் ஆராயப்பட்டது. வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதி அவசியம். அதனைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருப்பதாக வர்த்தக சங்கம் சுட்டிக்காட்டியிருந்தது. அந்தந்த பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதால், யாழ்ப்பாணத்திலிருந்து செல்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டி ருந்தனர். இது தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. தமது பகுதிகளுக்குச் சென்று அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் இருந்தால், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்பு கொண்டால் அதற்குரிய வழிவகைகளை செய்து கொடுக்கலாம் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## பாதிப்பு 1,620,000...

புதிதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் இனங்காணப்பட்டதில் இருந்து இந்தளவுக்குப் பெரும்தொகையான உயிரிழப்பும், நோய்த்தொற்றும் ஏற்படுவது இதுவே முதல் தடவை. இதையத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இன்று மாலை 5 மணி வரையிலான நிலவரத்தின்படி 16 லட்சத்து 20 ஆயிரமாக அதிகரித்தது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 97 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

## வேலணை பிரதேச சபை...

வைரஸ் தொற்றுத் தடுப்பு நடவடிக்கையின் காரணமாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் மக்களது இயல்பு வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரணப்பணிகளை வேலணை பிரதேச சபையின் பணியாளர்கள் இணைந்து முன்னெடுத்துள்ளனர்.
வேலணை பிரதேச சபையின் பணியாளர்கள் இந்தச் சவாலில் கடந்த 3ஆம் திகதி முதல் வேலணை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. நேற்று வரையில் மூன்று கட்டமாக 25 குடும்பங்களுக்கு தலா ஆயிரத்து 600 ரூபா பெறுமதியான உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும் வாரத்தில் அடுத்த கட்டமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கான உணவுப்பொருள்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன. (ஒ,5)

## விடுவிக்கப்பட்டோரில் தமிழர் எவருமில்லை...

பௌத்த பேரினவான இனநாயக அரசு என்பதனை பல தடவைகள் வெளிப்படுத்தியுள்ளன.
சமீபத்தில் சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் சிறுவர்கள் உட்பட 8 தமிழர்களை வெட்டியும் சுட்டும் படுகொலை செய்த போர்குற்றவாளி சுனில் இரத்நாயக்க விடுதலை செய்யப்பட்டார். இது இலங்கையில் நீதிக்கான வெளி தமிழர்களுக்கு இல்லை என்பதை வெளிக்காட்டியிருந்தது
தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காவே தமிழ் மக்கள் மீது அடக்குமுறையையும், பாகுபாட்டையும், பெரும் மனித உரிமை மீறல்களையும், இனப்படுகொலையையும் இலங்கை அரசு செய்திருந்தது.
இந்த நிலையில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று ஏற்பட்டுவிடக்கூடாது என்று முன்னெச்சரிக்கையாக விடுவிக்கப்பட்ட கைதிகளில் தமிழர்கள் எவரும் இல்லை என்பது தமிழர்களுக்கு நீதிக்கான வெளி இலங்கையில் இல்லை என்பதனை மட்டும் வெளிப்படுத்தவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-6)

## குடும்பத் தலைவர் மீது...

சம்பவம் புதுக்குடியிருப்பு மருதங்குளம் பகுதி காட்டுக்குள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.
இரண்டு பிள்ளைகள் தாய், தந்தை என்று நான்கு அங்கத்தவர்களுடைய அந்தக் குடும்பம் நிரந்தர வீடு இன்றி சிறு கொட்டிலில் வசித்து வருகின்றது. நாளாந்தம் கூலிவேலை செய்தே அந்தக் குடும்பம் பிழைப்பு நடத்துகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. ஊரடங்குச் சட்டம் காரணமாக கூலி வேலைக்குச் செல்லமுடியாத நிலையில் கிராமத்தில் கொடுக்கப்பட்ட உணவுப்பொதியுடன் காலம் கழிக்கின்றோம் என்று அந்தக் குடும்பத்தினர் கூறியுள்ளனர். இந்த நிலையிலேயே குறித்த நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.
"பிற்பகல் 3 மணியளவில் காட்டுக்குச் சென்ற தன்னைப் படையினர் கட்டி வைத்து தாக்கினர். சட்டவிரோத மதுபானம் தயாரிக்கும் கோடா பெரல்கள் காட்டுக்குள் காணப்பட்டன. அந்த இடத்தில் என்னை இருத்திப் படையினர் படம் எடுத்துக்கொண்டனர். இரவு 9 மணியளவில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் என்னை ஒப்படைத்தனர் என்றும், படையினர் மீது நான் தாக்குதல் நடத்தினேன் என்று பொய் முறைப்பாடு ஒன்றையும் படையினர் பொலிஸாருக்கு வழங்கியுள்ளனர் " என்றும் அவர் தெரிவித்தார்.
இதேவேளை, காட்டுக்குச் சென்ற குடும்பத் தலைவரைக் காணவில்லை என்று அவருடைய மனைவி அயலிலுள்ளவர்களை அழைத்துச்சென்று தேடிவிட்டு கிராம அமைப்பின் தலைவர்களை அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோதே அங்கு அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்று குடும்பத்தினர் கூறியுள்ளனர்.
அந்தக் குடும்பத் தலைவர் பற்றி கிராமத்தவர்கள் பொலிஸாருக்குக் கூறியநிலையில் அவரைப் பொலிஸார் விடுவித்தனர். தாக்குதலால் கண்ணின் மேற் புருவத்தில் காயமும், கைவிரல் ஒன்று நோவுடனும் அவர் காணப்படுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-19)




# சமுர்த்தி ஊழியரின் காதைக் கடித்தவர் பொலிஸால் கைது

*சிலாபம், ஏப். 10*

*சமுர்த்திச் சங்க நிர்வாக சபைச் செயலாளரின் காதைக் கடித்தார் என்ற குற்றச்சாட்டில் சிலாபத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

சிலாபம் முந்தல் புளிச்சக்குளம் பகுதியில் சம்பவம் நேற்று இடம்பெற்றது என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பணம் பெற்றுச் செல்லவந்த 52 வயதுடையவரே கைதுசெய்யப்பட்டுள்ளார். சமுர்த்தி உதவித் தொகையைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக புளிச்சகுளம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் மற்றும் சங்கத்தின் நிர்வாக சபைச் செயலாளர் ஆகியோருடன் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி காது கடிக்குமளவுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. அவர் சிலாபம் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நாளாந்தம் கூலி வேலை செய்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். சமுர்த்தி பெறுபவர்களுக்கு 10 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில், 5 ஆயிரம் ரூபா பணமும், மிகுதிக்குப் பொருள்களும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-114)



# கொரோனா தொற்றா? சிகிச்சையிலிருந்த கைதி தப்பியோட்டம்

கொழும்பு, ஏப். 10

கொரோனா தொற்று சந்தேகத்தில் சிகிச்சைக்காக காலி, கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த கைதி ஒருவர் அங்கிருந்து தப்பிச்சென்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காய்ச்சல், இருமல் காரணமாக குறித்த கைதி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்குக் கொரோனா தொற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது அவர் பாதிக்கப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்தநிலையில், குறித்த கைதி கொரோனா சிகிச்சைப் பிரிவிலிருந்து தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாத்தறை சிறையிலிருந்து பூசா சிறைக்கு மாற்றப்பட்ட நிலையில் குறித்த கைதி மருத்து வமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். வீடு உடைத்து திருட்டில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தர் எனத் தெரியவந்துள்ளது. (த-22)

# பேருவளையில் 16 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஏப். 10

களுத்துறை மாவட்டம், பேருவளையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 16 ஆக அதிகரித்துள்ளது.

பேருளை மாளிகாஹேன பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளான பெண்ணொருவர், நேற்று இனங்காணப்பட்டார். அதையடுத்து இந்த எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

குறித்த பெண்ணின் உறவினர்கள் 20 பேரைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (த-22)

# போதைப்பொருள் கைதிகளுக்கும் பிணை!

## சட்டமா அதிபர் பரிந்துரை

கொழும்பு,ஏப்.10

போதைப்பொருள்கள் விவகாரம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளில் சிறு குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்குப் பிணை வழங்குவது தொடர்பில் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவால் பரிந்துரைகள் அனுப்பப்பட்டன.

பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்னவுக்கே இந்தப் பரிந்துரைகள் அனுப்பப்பட்டன.

போதைப்பொருள் கைதிகளுக்குப் பிணை வழங்குவது தொடர்பில் 5 பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

13 ஆயிரத்துக்கும் அதிகமான விளக்கமறியல் கைதிகளில், 8 ஆயிரம் பேர் வரை போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் என சட்டமா அதிபரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனவே, இவர்களில் சிறு குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பிணை வழங்கும் முன்னர் தமது பரிந்துரைகளைப் பின்பற்றுமாறு சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக விளக்கமறியல் சிறைச்சாலைகளில் நிலவும் நெருக்கடியைக் கருத்தில்கொண்டு, விளக்கமறியல் கைதிகளுக்குப் பிணை வழங்குவது தொடர்பில் தற்போது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ-22)

# ஒளிநிலாவுக்கு விண்மீன் உதவி

யாழ்ப்பாணம், ஏப்.10

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள திடற்புலம் ஒளிநிலா விளையாட்டுக் கழகத்துக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக நாட்டில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதுமுள்ள வறுமைக் குட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலும் மக்கள் உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். திடற்புலம் ஒளிநிலா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களின் குடும்பங்களுக்கு வயாவிளான் விண்மீன் விளையாட்டுக்கழ கத்தால் உணர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. 70உலர் உணவுப்பொதிகள் இவ்வாறு வழங்கப்பட்டன என்று வயாவிளான் மின்மீன் விளையாட்டுக்கழகம் தெரிவித்தது. (ப)

# தாக்குதலில் ஒருவர் சாவு

திருகோணமலை, ஏப். 10

திருகோணமலைமொரவெவ 4ஆம் வாய்க்கால் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த சந்திரமோகன் (வயது44) என்பவரே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஓ,5)

# சிறுத்தையிடம் சிக்கி சிறுவன் கடுங்காயம்

புத்தளம்,ஏப்.10

சிறுத்தையின் கடிக்கு இலக்காகிய ஆறு வயதுச் சிறுவன் புத்தளம் ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான். புத்தளம் வில்பத்து எல்லையின் பலுஹதுறை மீனவ கிராமத்தைச் சேர்ந்த 6 வயதுச் சிறுவனே இவ்வாறு சிறுத்தைக் கடிக்கு இலக்காகியுள்ளான் என்று தெரிவிக்கப்படுகிறது.

கற்பிட்டியைச் சேர்ந்த இந்தச் சிறுவனது குடும்பம், கொரோனா அச்சம் காரணமாகக் குறித்த கிராமத்துக்குச் சென்று, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகவும் குடிசைக்குள் 5 பேருடன் உறங்கிக்கொண்டிருந்த போதே சிறுவன் சிறுத்தையின் கடிக்கு இலக்கானதாக சம்பவத்தை நேரில் கண்ட அவனது தந்தை தெரிவித்துள்ளார். (ப-114)

# பிரதேச சபை நிதியில் மக்களுக்கு நிவாரணம்

புதுக்குடியிருப்பு,ஏப்.10

கொரோனா பாதிப்பில் வறுமையில் வாடும் மக்களுக்குச் சபை நிதியில் இருந்து நிவாரண உதவிகளை வழங்க புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்று நடைபெற்றது.

பிரதேச சபையின் தவிசாளர் செ.பிறேமகாந் தலைமையில் நடைபெற்ற அமர்வில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நோய்த்தாக்கம் காரணமாகவும், அதுதொடர்பில் பிரதேச சபை எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக பாதிக்கப்பட்டு வறுமை நிலையில் உள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது

இதற்கு அமைய சபையின் நிலையான வைப்பில் இருந்து 12 மில்லியன் ரூபாவை ஆளுநரின் அனுமதியைப் பெற்று மக்களுக்கு தேவையான நிவாரணங்களை பிரதேச செயலாளர்கள் ஊடாக கூட்டுறவுச் சங்கங்களையும் இணைத்து வழங்குவதெனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-19)



# திருமலை மாவட்டத்தில் 2,196 பேர் சுய தனிமை!

## இதுவரை எவருக்கும் தொற்று இல்லை

திருகோணமலை, ஏப்.10

திருகோணமலை மாவட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து வந்த 744 பேரும், உள்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வந்த ஆயிரத்து 452 பேரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலர் ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

கொரோனா தடுப்புக்கான தனிமைப்படுத்தல் செயற்பாடு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ், கிரமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

"வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த 744 பேரும், உள்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வருகை தந்த ஆயிரத்து 452 பேரும் சுய தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவர்களுள் வெளிநாடுகளில் இருந்து வந்த 676 பேரினதும், உள்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வந்த 656 பேரினதும் சுய தனிமைப்படுத்தல் செயற்பாடு பூர்த்தியடைந்துள்ளது.

அத்துடன், சந்தேகத்துக்கிடமான 10 நபர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் எவருக்கும் கொரோனா தொற்று காணப்படவில்லை என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டம் இற்றைவரை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பாக உள்ளது. இங்கு எவருக்கும் இதுவரை நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. தொடராக இதனைப் பேண அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்" என்றார். (ப-22)



கனடாவில் உள்ள கொக்குவில் விளையாட்டு அக்கடமியால் வெளியிடப்பட்ட "கருவூலம்" நூலின் நிதியில் 45 பேருக்கு கொரோனா இடர் நிவாரண உதவிகள் நேற்று வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ஐ-222)

# தியத்தலாவையில் 12 பேர் தனிமை

கொழும்பு, ஏப்.10

கொரோனாத் தொற்றாளர் ஒருவருடன் தொடர்புகளைப் பேணியதாக உறுதிப்படுத்தப்பட்ட 12 பேர் நேற்றையதினம் தியத்தலாவை தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அக்குறணைப் பிரதேசத்தைச் சேர்ந்த 8 பேரும் பதுளையைச் சேர்ந்த 4 பேருமே இவ்வாறு தியத்தலாவைக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன், இதில் 6 ஆண்களும் 2 பெண்களும் 4 சிறுவர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-114)

# கிளிநொச்சி மக்களுக்கு பல உதவித் திட்டங்கள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஏப். 10

கிளிநொச்சி மாவட்டத்தில் 47ஆயிரத்து 517 குடும்பங்களில் 32ஆயிரத்து 121 குடும்பங்க ளுக்கு அரசின் உதவித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற 'கொவிட்19' விஷேட செயலணிக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாளாந்தம் உழைத்து வாழ்ந்து வந்த குடும்பங்கள் ஊரடங்கால் தங்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது சிரமப்பட்டனர். இவ்வாறான வர்களின் நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில் அரசு நடைமுறைப்படுத்திய அனைத்துச் செயற்றிட்டங்களையும் மக்களிடம் கொண்டு செல்வதில் அலுவலர்கள் உட்பட சகலரும் செயலாற்றி வருகின்றனர்.

ஊரடங்கு நேரத்தில் செயற்படுத்தவென்று பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அதன்படி,

1. வீடுகளுக்குச் சென்று சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கல்.

2. காத்திருப்புப் பட்டியலில் உள்ளவர்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு.

3. 4ஆயிரத்து 544 முதியவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாவாக வழங்கி வந்த முதியோருக்கான கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டு வீடுகளுக்குச் சென்று வழங்கப்படுகிறது.

4. 2ஆயிரத்து 535 சிறப்புத் தேவையுடையோருக்கான கொடுப்பனவும் 5 ஆயிரம் ரூபாவாக வழங்கப்படுகிறது.

5. 346 சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவு.

6. வருமானம் ஏதுவுமின்றி முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்ட 989 குடும்பங்களுக்குக் கொடுப்பனவு.

7. நடமாடும் வியாபார சேவைகள்.

8. மருத்துவமனைகளில் மாதாந்த கிளினிக் நோயாளர்களுக்கு வீடுகளுக்குச் சென்று மருந்துகள் வழங்கல்.

9. விவசாயிகள் விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள், மானிய உரம் விநியோகம்.

போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்ச்சியாக மக்களின் நிலைமைகள் அவதானிக்கப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாவட்டத்தில் 75 வீதமான குடும்பங்களுக்கு ஏதோவொரு வகையில் அரசின் உதவி திட்டங்கள் கிடைக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. என்றார். (து-214)

# சந்தர்ப்பவாதம் போட்டி மனப்பாங்கு நுகர்வுப்பண்பாடு

## கொரோனா பேரனர்த்தம்

● து.கௌரீஸ்வரன்

இந்த உலகில் மனித குலம் வாழ்வா? சாவா? என்கின்ற பேரனர்த்தத்திற்குள் அகப்பட்டு அதிலிருந்து தம்மைப் பாதுகாத்தலுக்கான தீர்க்கமான போராட்டத்தில் ஈடுபட்டு வரும் சூழலில், இப்போர்க்களத்தின் முன்னரங்கில் நின்று சமராடும் மருத்துவத் துறையினரும், இதற்கான ஏற்பாடுகளை வழங்கிக் கொண்டிருக்கும் அரசும் அதன் நிருவாகக் கட்டமைப்பினரும் எதிர்கொள்ளும் பாரிய சவால் சமூக இடைவெளியை உரிய முறையில் பேணுவதில் ஏற்படும் இடர்களேயாகும்.

சமூக இடைவெளி சரியாகப் பேணப்படாமையால் உயிரைப்பணயம் வைத்துப் போராடும் மருத்துவத்துறையினரின் முன்னேற்றம் 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலைமையினையே ஏற்படுத்தி வருவதாக உள்ளது. இதனால் சமூக இடைவெளியைப் பேணாதோருக்கு எதிராக அரசும் தவிர்க்க முடியாமல் சட்டத்தைப் பிரயோகிக்க வேண்டிய துர்ப்பாக்கியத்திற்குள் தள்ளப்படுகின்றது.

இன்னொரு பக்கம் பெரும்பாலான மக்களிடமிருந்து இல்லாமை பற்றிய கதைகளும் கையேந்தி நிற்கும் காட்சிகளும் ஊடகங்களூடாக வெளிக்கொணரப்படுகின்றன. இத்தகைய சமூக நிலைமைகளுக்கான பின்னணி குறித்தும் இது வலுவடைந்தமைக்கான காரணங்கள் பற்றியும் ஆராய வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உணரப்படுகின்றது. இக்குறிப்புக்கள் இதனை உரையாட முனைகின்றது.

காலனித்துவமும் அதற்குச் சாதகமான வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள நகரமயமாக்கமும் நவீனமயமாக்கமும் நுகர்வுப்பண்பாட்டு உருவாக்கமும் நம்மிடையே போட்டி மனப்பாங்கை வலுவாக வேரோள்ளச் செய்துள்ளன. அவற்றின் விளைவுகளை நாம் இன்று பார்க்கின்றோம். சிறு பராயத்திலிருந்தே போட்டி மனப்பாங்கு நம்மிடையே விதைக்கப்பட்டு ஆழமாக வேரோள்ளச் செய்யப்படுகின்றன. 'போட்டி இல்லையேல் பங்குபற்றலில்லை?!' எனும் நிலைமை நமது கல்வித் துறையின் எதார்த்தமாகியுள்ளது. வசதியான வாழ்க்கைக்கு போட்டியிடுவதும் போட்டியில் வெற்றி பெறுவதுமே சூத்திரமாக போதிக்கப்பட்டு வருகின்றது. போட்டி மனப்பாங்கு சந்தர்ப்பங்களைத் தனது சுயநலத்திற்குரிய வகையில் சாதகமாக்கிக் கொள்வதில் கவனக் குவிப்புடன் இயங்குவது இயல்பாகியுள்ளது. இந்த உளவியலின் விளைவுதான் இன்று கொரோனா அனர்த்தத்தின் போது அத்தியாவசியப் பொருட்களுக்கான செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்கச் செய்துள்ளது. பணவசதி படைத்த வர்க்கத்தார் ஊரடங்கு தளர்த்தப்படும் போது பலநாட்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்துவிடுகின்றனர் இது சந்தையில் செயற்கைத்தட்டுப்பாட்டை உருவாக்கி விலையேற்றங்களுக்கும் வழிவகுக்கின்றது. இங்கு உள்ள வளத்தை அனைவருக்கும் பங்கிட்டு வாழும் வாழ்வு அர்த்தமற்றுப் போகின்றது. இதனால் உடலுழைப்பை மாத்திரம்



மூலதனமாகக் கொண்டு வாழும் மனிதர்களே மிகவும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே சந்தர்ப்பவாதம், போட்டி மனப்பாங்கு விளைவித்துள்ள சமூகம் அதன் உளவியல் நிலைமை பற்றி நாம் ஆழமான மறுமதிப்பீடுகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

அடுத்து நமது நாட்டில் பிரதானம் பெற்றுள்ள நுகர்வுப்பண்பாடும் அதற்கு அடிப்படையான சேவைத் தொழிற்துறையும் எம்மிடையே பாரம்பரியமாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த சேமிப்புப் பழக்கத்தை இல்லாமலாக்கிவிட்டது. நாளாந்தம் சோறு சமைக்கும் போது ஒரு கைப்பிடி அரிசியினைச் சேமிக்கும் நமது பாரம்பரிய நடைமுறைகள் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளன. பாரம்பரிய விவசாய முறையில் அடுத்த உற்பத்திக்காக தானியங்களைச் சேமித்து வைக்கும் நடைமுறை மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதையினங்களின் வரவால் இல்லாமலாகிவிட்டது. இதனுடன் சேர்ந்து தானியங்களைச் சேமிக்கும் பண்பாட்டுப் பழக்க வழக்கமும் மெல்ல மெல்ல வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இது திடீரென ஏற்படும் பொருளாதார விநியோக தடைகளின் போது உணவு இருப்பு இல்லாமல் வாழும் குடும்பங்களை அதிகரிக்கச் செய்துள்ளது.

அண்மைய தசாப்தங்களுக்கு முன்னர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்காக அரசால் வழங்கப்பட்ட நிவாரணங்க ளில் கூட்டுறவுச் சங்கத்தினூடாக அரிசி முதலிய தானியங்களே வழங்கப்பட்டு வந்தன. மாதாந்தம் இரு தடவைகள் இந்த நிவாரணங்கள் கிராம மட்டத்தில் வழங்கப்பட்டு வந்தன. இது வறுமைப்பட்டவர்களின் வீடுகளில் உணவின் இருப்பை உறுதிப்படுத்தியது. அனர்த்தங்கள் வரும் போது அதைத் தாக்குப் பிடித்து நிற்பதற்கான குறைந்தபட்ச உண விருப்பை இது உறுதிப்படுத்தியது. இதற்காக உள்ளூர் விவசாயிகளிடமிருந்து வருடாந்தம் ஒரு தொகுதி உற்பத்திகள் அரசால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு மாவட்டங்களிலும் நெல்லு, அரிசிக் களஞ்சியங்கள் நிரம்பி வழிந்தன. ஆனால் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட வறுமை ஒழிப்பு வேலைத்திட்டங்கள் தானியத்திற்குப் பதிலாக பணத்தை வழங்குவதாக மாற்றப்பட்டது. அரசின் நெல்களஞ்சியங்கள் பாழ்விழுந்து போயின சில தனியாருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன. உள்ளூர் விவசாயிகள் அறாவிலைக்கு தனியாரிடம் தமது நெல்லை விற்க வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டனர். இத னால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தவர்களின் வீடுகளின் பானைகளுக்குள் அடுத்த வேளைக்கான உணவுக்குரிய தானியங்களைச் சேமிக்கும் தன்மை இல்லாமல் போனது மாறாக கடன் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட சிறு குழு உரு வாக்கமும் கடன் வழங்கலும் நுண்கடன்களைப் பெற்று திக்குமுக்காடும் அவலத்திற்குள் அத்தகையோரின் (வறுமைப்பட்டோர்) பெரும்பாலானோரை

(அடுத்த பக்கம் பார்க்க)

> **மக்கள் இன்று விநியோகம் தடைப்பட்டதால் ஒரு வேளை உணவு இன்றி தவிப்பதாக செய்திகள் வருகின்றன. காணொளிகள் காட்டப்படுகின்றன. கையேந்தும் மனிதர்களுக்கு கருணை காட்டுமாறு கோரப்படுகின்றது. கருணை காட்டுவது விளம்பரமாக விரிவு பெறு கின்றது. இவை விளைவிக்கும் உளவியல் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கையேந்தும் மனிதர்களாகக் காட்டப்படுபவர்களின் அடுத்த சந்ததிகளின் உளநலம் எத்தகையதாக இருக்கும்?**



- வ.துசாந்தன்

# கொள்ளை கூட்டங்கள்




றோட்டுக்குப் போக ஏலா
சொந்தங்களோட பேசிட ஏலா
சுகதுக்கங்களில் கலந்திட ஏலா
கைகளைகொடுத்திட ஏலா
ஆடம்பரமாக வாழ்ந்திட ஏலா

வீட்டிலையும் தள்ளித்தான்
வீதியிலையும் தள்ளித்தான்
மைதானத்திலும் தள்ளித்தான்
மயானத்திலும் தள்ளித்தான்
மதத்தலங்களிலும் தள்ளித்தான்

சோற்றுக்கும் வழியில்லை
சொந்த உழைப்பும் இல்லை
மந்திரமும் கேட்பதில்லை
மனதுக்கு நிம்மதியுமில்லை

இருப்பதைக் கொடுத்திடுவோம்
இரந்தாவது கொடுத்திடுவோம்
இல்லாதவர்களுக்கும் கொடுத்திடுவோம்
இரக்கத்தையும் கொடுத்திடுவோம்
நினைக்குதுகள் நல்மனங்கள்!

சாவதெல்லாம் சாகட்டும்
வாடுவதெல்லாம் வாடட்டும்
வாய்த்ததை வாய்ப்பாக்கி
விலை ஏற்றியே விற்று
செல்வந்தன் ஆகிட துடிக்கும்
மாபாவிகளை என்னவென்று அழைப்பது?



## சந்தர்ப்பவாதம்


(தொடர்ச்சி)

இட்டுச்சென்றது. இது உணவுச் சேமிப்புப் பழக்கத்திலிருந்து விலகி பிறரிடம் கடன் கேட்கும் தன்மைக்கு நிலை மாற்றியது. பங்கீட்டுக் கடையினை நோக்கிச் சென்றவர்கள் நிதிநிறுவனங்களை (வட்டிக்கடைகளை) நோக்கி நகர்த்தப்பட்டார்கள். கடன் அடைக்க கடன் வாங்கி, கடன் வாங்கி இறுதியில் பெருங்கடன் சுமையுடன் திக்குமுக்குப்படும் அவல வாழ்க்கை. குடும்பத்தில் பிள்ளைகள் அதிகமிருந்தால் வயதில் மூத்தவர்கள் கல்வியிலிருந்து இடைவிலகி சேவைத்தொழில் துறைகளை நாடிச்செல்ல வழியேற்படுத்தியது. பெண்களை வீட்டு வேலையாளராக மத்திய கிழக்கினை நோக்கி நகர்த்தியது.

அரசால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தவர்களுக்கு தானியங்கள் பங்கீட்டுக் கடைகள் ஊடாக வழங்கப்பட்ட நாட்களில் இத்தகைய குடும்பங்களிலிருந்து கல்வியில் பலர் முன்னேற்றமடைந்தனர். இது வறுமைக் கோட்டின் கீழிருந்தவர்களிடையே பிறரிடம் கையேந்தும் உளவியலை வலுப்படுத்துவதற்கு மாறாக வறுமையிலிருந்து மீண்டெழுவதற்கான உத்வேகத்தை உந்து சக்தியை வழங்கியிருந்தன. போர்க்காலத்திலும் வறுமைக் கோட்டின்கீழ் வாழ்ந்த மக்கள் பட்டினியின்றித் தாக்குப் பிடிப்பதற்கு பங்கீட்டுக் கடைத் தானியங்கள் பெரும்பங்காற்றியிருந்தன.

ஆனால் இத்தகைய மக்கள் இன்று விநியோகம் தடைப்பட்டதால் ஒரு வேளை உணவு இன்றி தவிப்பதாக செய்திகள் வருகின்றன. காணொளிகள் காட்டப்படுகின்றன. கையேந்தும் மனிதர்களுக்கு கருணை காட்டுமாறு கோரப்படுகின்றது. கருணை காட்டுவது விளம்பரமாக விரிவு பெறுகின்றது. இவை விளைவிக்கும் உளவியல் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கையேந்தும் மனிதர்களாகக் காட்டப்படுபவர்களின் அடுத்த சந்ததிகளின் உளநலம் எத்தகையதாக இருக்கும்? இதனால் உருவாகும் விளைவுகள் எவ்வாறு அமையும்? என்பது பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டியுள்ளது. எனவே! இந்த நிலைமைகளுக்கான பின்னணிகள் குறித்து ஆராய்ந்து விவாதித்து நமது உள்ளூர் உற்பத்திகளை வலுப்படுத்தும் செயற்றிட்டங்கள் தொடர்பிலும் அதற்குச் சாதகமான வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளிலும் கவனஞ்செலுத்த வேண்டிய அவசியத்தை கொரொனா பேரனரத்;தம் ஏற்படுத்தியுள்ளது. மிகவும் முக்கியமாக நமது பண்பாடாக விளங்கிய சேமிப்புப் பழக்கத்தை மீளக்கொண்டு வருவதற்கான அதனை வலுப்படுத்துவதற்கான பொருளாதார வறுமை நிவாரண நடைமுறைகளை நாம் சிந்திக்க வேண்டியுள்ளது.

# தொற்றுக்கள் தொடாதவரை....



மாற்றான் வீட்டு
மாடித் தோட்டத்தை,
உச்சுக் கொட்டி வியந்து,
உறவாடியதோடு,
நின்றே போயிருந்தது
என் வேலை.
என் வீட்டு மாடி,
மொட்டை மாடியே
இன்னும்&..

மஞ்சள் வேப்பிலை
மகத்துவம் எல்லாம்
மாலைவேளையில்,
யூடியுப் சனல்கள்
தட்டியபோது,
எட்டிப்பார்த்ததோடு,
கடந்தே போயிருந்தது
என் பொழுதுகள்.

உள்ளூர் உணவு
ஊட்டச்சத்தெல்லாம்,
உள்ளூர் சமையல்
நிகழ்ச்சியில்,
ஊடாடியதோடு,
ஊக்கமற்றே போயிருந்தது
என் சமையல்.
என் வீட்டு உணவு
உடனடி உணவே,
இன்னும்..
தொற்றொன்று வந்து
தொடாத வரை,
தொட்டாச்சிணுங்கி மாதிரி,
தொட்ட மாத்திரத்தில்
ஒட்டிய பட்டறிவு,
ஒட்டாமல் இருக்கிறது
புத்தியில்,
தொற்றுக்கள் தொடாத
வரை...

இரா. சுலக்ஷனா,
நுண்கலைத்துறை,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை; வியாபார நிலையம் மீது வழக்கு

மன்னார்,ஏப்.10

அத்தியாவசியப் பொருளான அரிசியை அதிக விலைக்கு விற்ற குற்றச்சாட்டில் மொத்த வியாபார நிலையம் ஒன்றின் மீது மன்னார் மாவட்ட பாவனையாளர் அதிகார சபையால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் நேற்று காலை 6.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டது. இந் நிலையில் பொதுமக்கள் தமது அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டினர். மக்களின் அவசரநிலையைச் சாதகமாகப் பயன்படுத்தி கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக அரிசி விற்பனையில் ஈடுபட்ட மன்னாரில் உள்ள மொத்த வியாபார நிலையம் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அத்துடன் அரசாங்கத்தால் 100 ரூபா நிர்ணய விலையாக்கப் பட்ட ரின் மீனை விற்பனை செய்யாமல் பதுக்கிவைத்தமைக்காகவும் குறித்த வியாபார நிலையம் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)

# 95 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கொடிகாமம்,ஏப்.10

கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் மற்றும் ஞானசூரியன் முன்பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களது குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண

சூழ்நிலையால் நாளாந்தம் வேலைக்கு

சென்று வருமானத்தைப் பெறும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் இவ்வாறு பாதிக்கப்பட்ட 95 மாணவர்களது குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

வித்தியாலயத்தின் நிறுவுநர் ஆறுமுகம் கனகரத்தினம் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.(ஐ-159)



# அசிஸ்ற் அமைப்பினரால் வடக்கு,கிழக்கில் உதவிகள்

காரைதீவு, ஏப்.10

புனர்வாழ்வும் புதுவாழ்வும் (அசிஸ்ற் ஆர்.ஆர்) அமைப்பினரால், உலர் உணவு நிவாரணப்பொதிகள் வழங்கும் பணிகள் வடக்கு, கிழக்கில் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. நெடுங்கேணி தங்கவேலாயுதபுரம், விநாயகபுரம், திராய்க்கேணி வளத்தாப்பிட்டி, கோபாலபுரம் போன்ற பின்தங்கிய இடங்களுக்குப் பொதிகள் வழங்கப் பட்டன. வடக்கில் நெடுங்கேணியில் 2000 பொதிகள், கிழக்கில் 500 பொதி கள் முதற்கட்டமாக வழங்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக மேலும் சில பின்தங்கிய பகுதிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அசிஸ்ற் ஆர். ஆர் அமைப்பின் சர்வ தேச தலைவர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரனரால் இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (க)

# முகக்கவசங்கள் கையளிப்பு



சங்கானை,ஏப்.10

சங்கானைப் பிரதேசத்தில் கொரோனா விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபடும் துறை சார்ந்தவர்களுக்கு முகக் கவசங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

தற்போது நிலவும் அசாதாரண நிலையில் பெரும்பாலான பணியாளர்கள் முககவசமின்றி தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு புலம்பெயர்வாளர் ஒருவரின் நன்கொடையில் பெறப்பட்ட முகக் கவசங்கள் மருத்துவமனை, சுகாதாரப் பணிமனை, பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ் நிணைக்களம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன. (ஐ-7)

# முல்லை. ஹிஜ்ராபுரத்தில் 45 குடும்பங்களுக்கு உணவு



முல்லைத்தீவு, ஏப். 10

முல்லைத்தீவு ஹிஜ்ராபுரம் கிராம அலுவர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 45 குடும்பங்க ளுக்குத் தேவையான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் பிரதி அவைத்தலைவர் அமரர் அன்ரனி ஜெயநாதனின் ஞாபகார்த்தமாக “அன்ரனி ஜெயநாதன்” அறக் கட்டளையின் நிதி பங்களிப்பில் இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட வாலிபர் முன்னணியினர் இந்த உலர் உணவுப் பொதிகளை வழங்கினர். (ப-222)



# சிவகாமி அறக்கட்டளையால் அட்டப்பள்ளத்துக்கு நிவாரணம்

அம்பாறை,ஏப்.10

பிரித்தானியா ‘அன்னை சிவகாமி அறக்கட் டளை’ அமைப்பினரால், கொரோனா நெருக்கடிக்குள்ளான மக்களுக்கு உலருணவு நிவாரணம் வழங்கும் திட்டம், அம்பாறை மாவட்டம், அட்டப்பள்ளத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. அமைப்பின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் சோ.வினோஸ் குமாரின் ஏற்பாட்டில், அட்டப்பள்ளம் கிராம மக்களுக்கு 200 உலருணவுப்பொதி கள் வழங்கப்பட்டன. தனது அன்னையின் பேரால் கடந்த 10 வருடங்களாக சமுக சேவையாற்றிவரும் மகாதேவன் சத்தியருபன் (லண்டன்) என்பவரது நிதியுதவியில், மக்க ளுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. (க)



# பிரதேச சபையின் நலன்புரி சங்கத்தால் உணவுப் பொதி

திருகோணமலை, ஏப்.10

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை நலன்புரிச் சங்கத்தால் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 350 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஊரடங்குச் சட்டத்தால் அன்றாட உணவுத் தேவை களைப் பூர்த்தி செய்ய முடியாத ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் அவர்களு டைய வீடு வீடாகச் சென்று வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப் பட்டது. இதற்குரிய நிதியை சிங்கப்பூ ரில் வாழும் திருமதி தவம் என்பவர் , திருகோணமலை றோட்டரிக் கழகத்தினூடாக வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

# தொழிலதிபரால் 724பேருக்குஉதவி

யாழ்ப்பாணம்,ஏப்.10

வலி. தென் மேற்கு பிரான்பற்றுக் கிராமத்தைச் சேர்ந்த பிரபல தொழிலதி பர் நல்லசேகரம் இந்திரன், பிரான் பற்றுக் கிராமத்தைச் சேர்ந்த 724 குடும் பங்களுக்கு, உலர் உணவுப் பொதி களை வழங்கியுள்ளார்.

அரிசி 10 கிலோ, கோதுமை மா 10 கிலோ, சீனி 2 கிலோ, பருப்பு 2 கிலோ மற்றும் ரின் மீன்கள் உட்பட ஒவ்வொ ருவருக்கும் மூவாயிரம் ரூபா பெறுமதி யான பெறுமதிமிக்க உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. பிரான் பற்று இளைஞர்களின் பங்களிப்புடன், தொழிலதிபர் நல்லசேகரம் இந்திரனின் நேரடி வழிகாட்டலில் பிரான்பற்று கிராமத்தைச் சேர்ந்த 724 குடும்பங்க ளுக்கும் வீடு வீடாகச் சென்று இந்த உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட் டன. (க-50)

# 50 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உணவு

கொடிகாமம், ஏப்.10

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை அரசர் கேணி மற்றும் கிளாலிப் பகுதிகளில் வாழ் கின்ற 50 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் புதன்கி ழமை உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித் தார்த்தனின் தனிப்பட்ட நிதிப் பங்களிப்பி லேயே இந்தக் குடும்பங்களுக்கான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. குறித்த பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று இந்தப் பொதிகளை வழங்கப்பட்டன. (ப-159)





## கொரோனா பாதுகாப்பு கவசங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.10

யாழ்ப்பாணத்தில், கொரனா தொற்று அடையாளம் காணப்பட்ட இடங்களில் கடமைபுரியும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் உபயோகத்துக்கென விசேட உடற் கவசம் , கையுறைகள், முகக் கவசங்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டன.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையினரால், ரூபா ஒரு லட்சத்துக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் குறித்த உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, யாழ்ப்பாணத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது. (ப-7)

## அறபாநகர் மக்களுக்கு உலர் உணவுப் பொதி

மட்டக்களப்பு, ஏப்.10

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமான அறபாநகர் கிராமத்திலுள்ள 186 குடும்பங்களுக்கு வீடு வீடாகச் சென்று உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமான அறபாநகர் ஜூம்ஆப் பள்ளிவாசல் நிறுவாகத்தினரின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அன்றாட இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பாதிக்கப்பட்ட அறபாநகர் கிராமத்திலுள்ள 186 குடும்பங்களுக்கே இவ்வாறு வீடு வீடாகச் சென்று உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்மை குறிப்பிடத்தக்கது. (ப-150)



# கொரோனாவை எதிர்த்து நிற்க மக்கள் தவிர்க்க வேண்டியவை

யாழ்ப்பாணம், ஏப்.10

கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் இக்காலத்தில் பொதுமக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டிய முக்கிய விடயங்களை தென்மராட்சி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சூ.குணசாந்தன் வெளியிட்டுள்ளார்.

அவ்வாறு அவர் வெளியிட்டுள்ள விடயங்கள் வருமாறு;

தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் இருந்து தனிமைப் படுத்தல் காலம் முடிவடைய முன் வெளியேறுதல். ( அயல் வீடு, கடை, கோவில் போன்றவற்றுக்கு செல்லுதல்), தனிமைப்படுத்தப்பட்ட இடமொன்றினுள் முன்னனுமதியின்றி நுழைதல், நோய்க் குட்பட்ட பிரதேசத்தில் அல்லது நாட்டில் இருந்து ஒருவர் வருகைதந்தால் அவர் பற்றிய விவரங்களை மறைத்தல், கொரோனா நோயறிகுறிகள் தென்படும்போது அதனை மறைத்து சிகிச்சை பெற முயற்சித்தல், கொரோனா நோயறிகுறிகளுடன் மற்றவர்களுக்குத் தொற்றுடையும் விதமாக பொது இடங்களுக்குச் செல்லுதல், தொற்று ஏற்பட வாய்ப்பளித்தல், கொரோனா நோயறிகுறிகளுடன் பொதுப் போக்குவரத்துச் சாதனங்களை பயன்படுத்துதல், தனிமைப்படுத்தலுக்கு உட்படவேண்டியவராக இருந்துகொண்டு தலைமறைவாக வாழ முற்படுதல், கொரோனா கட்டுப்பாட்டில் ஈடுபடும் அதிகாரிகளினால் நோய்ப்பரம்பலைக் கட்டுப்படுத்த வழங்கப்படும் கட்டளைகளை அலட்சியம் செய்தல் ( சமூக இடைவெளி பேணாமை), கொரோனா கட்டுப்பாட்டில் ஈடுபடும் அதிகாரிகளுக்கு முட்டுக் கட்டையிடுதல், உதவ மறுத்தல், காயங்களை விளைவித்தல், பொய்த்தகவல்களை வழங்குதல், பரப்புதல் இவற்றில் ஈடுபடுதல் குற்றச்செயல்களாகவே கருதப்படும் என்பதனை கவனத்தில் கொள்ளுங்கள் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அறிவித்துள்ளார் . (ஐ-159)

# பதுக்கியிருந்த 2,000 கிலோ அரிசி வவுனியாவில் மீட்பு

### பாவனையாளர் அதிகார சபை அதிரடி

வவுனியா, ஏப்.10

பதுக்கி வைக்கப்பட்டிந்த நிலையில் 2ஆயிரம் கிலோ அரிசி நேற்றுக் காலை வவுனியாவில் மீட்கப்பட்டுள்ளது. வவுனியா மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரின் அதிரடி நடவடிக்கையால் அந்த அரிசி மீட்கப்பட்டது.



வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் அமைந்துள்ள ஓர் வர்த்தக நிலையத்தினுள் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது 10 கிலோ அரிசி 200 மூடை , 1 கிலோ மிளகாய்த் தூள் 18 பைக்கற் என்பன பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் அந்த வர்த்தக நிலையத்திலிருந்து மீட்கப்பட்டது.

குறித்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ப 18)

## முன்மாதிரி ஆசிரியர்

கொடிகாமம்,ஏப்.10

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கல்லூரியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் தனது வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் 27 பேருக்கு தலா ஆயி ரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளார். (ஐ-159)

# தயாராகின்றன மின்வழிக்கற்றல்

யாழ்ப்பாணம், ஏப். 10



நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், அனைத்து தமிழ் மாணவர்களும் பயன்பெறக்கூடிய வகையில் யாழ்.இந்துக் கல்லூரி ஆசிரியர்களின் பங்களிப்புடன் மின்வழிக்கற்றல் (elearning) காணொலிகள் தயாரிக்கப்படுகின்றன. வெகு விரைவில் அனைவரும் பார்வையிடக் கூடிய வகையில் இவை பதிவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 10.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.